# TAMIL - FIRST LANGUAGE
# தமிழ் (முதன்மொழி)
## MODEL QUESTION PAPER: 2025 - 2026
## மாதிரி வினாத்தாள்-1: 2025-2026

**Class : X ]** **(Max. Marks : 100)** **[ Time : 3.15 Hrs.**

**மாணவர்களுக்கு குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாளில் மொத்தம் 3 பகுதிகள் உள்ளது.
2. வினாத்தாளை படிப்பதற்கு 15 நிமிடங்களும் விடைகளை எழுதுவதற்கு 3 மணி நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.
3. அனைத்து வினாக்களுக்கும் விடைகளை விடைத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.
4. விடைகளையும் திருத்தமாகவும், தெளிவாகவும் எழுத வேண்டும்.

---

### பகுதி - I

**I. புரிந்து கொள்ளுதல் - விடையளித்தல் : (24 மதிப்பெண்கள்)**

1. கீழ்க்காணும் செய்யுளைப் படித்து, கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையி. 8 ம

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

**வினாக்கள்:**

அ. பாடலில் உலகப் பொதுமறை என அழைக்கப்படும் நூல் எது?

ஆ. தென்னன் என்பது யாரைக் குறிக்கிறது?

இ. நற்கணக்கு - என்பது எந்நூல்களைச் சுட்டுகிறது?

ஈ. பாடலில் இடம்பெறாத ஐம்பெரும் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

(அல்லது)

[ Turn Over

மாற்றம் எனது மானிடத் தத்துவம்
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவார்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!

**வினாக்கள்:**

அ. கவிஞரின் வழி யாது?

ஆ. எதை மானிடத் தத்துவம் என்று கூறுகிறார்?

இ. அட்சய பாத்திரம் என்று கவிஞர் கூறுவது எது?

ஈ. தர்பார் என்பதன் பொருள் என்ன?

**2. கீழ்க்காணும் அறிந்த உரைநடையைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.** 8 ம

ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும். மொழி பெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறிய முடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது. பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன் மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப் புகழ்பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கிய படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழி பெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள்.

**வினாக்கள்:**

அ. மொழிபெயர்ப்பினால் நாம் எதை அறிந்து கொள்கிறோம்?

ஆ. எவ்வகையில் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்?

இ. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பை இவ்வாறு குறிப்பிடுவார்?

ஈ. மேற்காணும் பத்தியைப் பயன்படுத்தி வினா ஒன்றை தயார் செய்க.

[ Contd... 3rd

**3. கீழ்க்காணும் துணைப்பாடக் கதையை வரிசைப்படுத்தி எழுதுக.** 8 ம

அ. 1985 இல் மூச்சுக்குழாய்த் தடங்கலால் பேசும்திறனை இழந்தார்.

ஆ. மருத்துவ உலகமே மிரண்டு போகுமளவு மேலும் 53 ஆண்டுகள் இயங்கினார்.

இ. மருத்துவத்திற்குப் பின் அவர் இன்னும் சில திங்களே உயிர் வாழ்வார் விரைவில் இறந்துவிடுவார் என்றும் மருத்துவர்கள் அறிக்கை தந்தனர்.

ஈ. ஸ்டீபன் ஹாக்கிங் இங்கிலாந்து மருத்துவமனை ஒன்றில் 1963 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டார்.

## II. சுயமாக எழுதுதல் - படைப்பாற்றல் : (44 மதிப்பெண்கள்)

**கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் விடையளி.** 3×4=12 ம

**4.** பாரதியார் - குறிப்பு எழுதுக.

**5.** காவடியாட்டம் குறித்து எழுதுக.

**6.** 'மிஸ் வில்சன்' - பண்பு நலன் குறித்து எழுதுக.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு எட்டு அல்லது பத்து வாக்கியங்களில் விடையளி.** 4×8=32 ம

**7.** சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**8.** தமிழன் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

'சங்க இலக்கியத்தில் அறம்' என்ற தலைப்பில் உன் கருத்துகளை எழுதுக.

**9.** அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' – சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

**(அல்லது)**

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்கவும்.

**10.** உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

III. **மொழித்திறன் : (32 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடையளி.** 9×2=18 ம

**11.** மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக்கோன்
கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.

மேற்காணும் செய்யுளில் அமைந்துள்ள அணியைச்சுட்டி விளக்கம் தருக. 2ம

**12.** முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

மேற்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு எழுதுக. 2ம

**13.** (அ) யாக்கையைப் பிணித்தென்று ஆக – அடிக்கோடிட்ட சொல்லின் பொருளை எழுதுக. 1ம

(ஆ) பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப – அடிக்கோடிட்ட சொல்லின் பொருளை கண்டுபிடி. 1ம

1. சக்கரம் 2. மலை 3. விரிந்து 4. நற்சொல்

[ Contd... 5th

**14.** (அ) <u>சிலம்பு</u> அடைந்திருந்த பாக்கம் எய்தி - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் இருபொருளை எழுதுக. 1ம

(ஆ) யானைகள் கூட்டம் கூட்டமாக வந்தன - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்தரும் பல சொற்களைக் கண்டுபிடி. 1ம

1. வேழம், களிறு 2. கரி, மா

3. பகடு, எண்கு 4. கைம்மா, மரை

**15.** (அ) மூவேந்தர்களால் <u>நாற்றிசை</u>யும் போற்றி வளர்க்கப்பட்டது முத்தமிழ். - இத்தொடரில் அடிக்கோடிட்ட தொகைச் சொல்லை விரித்தெழுதுக.1ம

(ஆ) என் பூரண <u>ஆசிர்வாதத்தை</u> வேண்டி, கை எடுத்துக் கும்பிட்டு நான் போயிட்டு வர்றேன் என்றான். - அடிக்கோடிட்ட பிறமொழிச்சொல்லிற்கு நிகரான தமிழ்ச்சொல்லைக் கண்டுபிடி.

1. நீராட்டு 2. குடமுழக்கு 3. வாழ்த்து 4. வழிபாடு 1ம

**16.** (அ) எற்பாடு என்பது எந்நேரத்தைக் குறிக்கும்? 1ம

(ஆ) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணத்தைக் கண்டுபிடி. 1ம

1. நாட்டைக் கைப்பற்றல் 2. ஆநிரை கவர்தல்

3. வலிமையை நிலைநாட்டல் 4. கோட்டையை முற்றுகையிடல்

**17.** (அ). அள்ளி இறைத்தல் - இம்மரபுத் தொடருக்கு பொருள் எழுதுக. 1ம

(ஆ). ஆறப்போடுதல் -இம்மரபுத்தொடருக்குப் பொருளைக் கண்டுபிடி.1ம

**18.** கண்ணினைக் காக்கும் இமைபோல - இவ்வுவமைத்தொடரை வாக்கியத்தில் அமைக்கவும். 2ம

**19.** சிலைமேல் எழுத்து போல - இவ்வுவமைத்தொடரை வாக்கியத்தில் அமைக்கவும். 2ம

கீழ்க்காணும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி விடை எழுதுக. 14x1=14ம

**20.** 'நேற்று வருவான்' என்பது எவ்வகை வழு? 1ம

**21.** எம் + தமிழ் + நா - சேர்த்து எழுதுக. 1ம

**[ Turn Over**

22. 'வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்' - அடிக்கோடிட்ட சொல்லிற்கு இலக்கணக் குறிப்பைக் கண்டுபிடி. 1ம

அ) எண்ணம்மை ஆ) உம்மைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) பண்புத் தொகை

23. 'அசைஇ' - இச்சொல்லிற்கு இலக்கணம் குறிப்பு எழுதுக. 1ம

24. காலம் காட்டும் பகுபத உறுப்பு எது? கண்டுபிடி.

அ). பகுதி ஆ) இடைநிலை இ) விகாரம் ஈ) விகுதி 1ம

25. 'ஒலித்து' - இப்பகுமுபதத்தின் விகுதிகளைக் கண்டுபிடி.

1. த் 2. து 3. ஒலி 4. உ 1ம

26. 'கேட்ட பாடல்' - என்பது எவ்வகைத் தொகாநிலைத்தொடர்? 1ம

27. கனிமொழி படத்தை வரைந்தாள் - எனும் இச்செய்வினைத்தொடர் செயப்பாட்டு வினைத்தொடராக எவ்வாறு மாறும்? கண்டுபிடி. 1ம

அ) படம் கனிமொழியால் வரையப்பட்டது.

ஆ) படத்தை கனிமொழியால் வரையப்பட்டது.

இ) கனிமொழி வரைந்தாள் படம்.

ஈ) வரைந்தாள் கனிமொழி படம்.

28. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். - இத்தொடரைக் கலவைத்தொடராக மாற்றி எழுதுக. 1ம

29. வேந்தன் திருக்குறள் கற்றான் - என்பது எவ்வகைத்தொடர் கண்டுபிடி.

அ) பிறவினை ஆ) எதிர்மறை

இ) தன்வினை ஈ) உணர்ச்சி 1ம

30. போய் வாரும்! ...... மடிக்கணினி என்று ஏதோ கூறினார்! - என்பது எவ்வகைத்தொடர். 1ம

31. 'இச்செயலை செய்தது மங்கையா? மணிமேகலையா?' என வினவுதல் எவ்வகை வினா? 1ம

32. 'இது செய்வாயா?' என வினவிய போது 'நீயே செய்' என்று கூறுவது எவ்வகை விடை? கண்டுபிடி. 1ம

அ) நேர் விடை ஆ) ஏவல் விடை

இ) மறை விடை ஈ) இனமொழி விடை

33. ஆலத்து மேல குவளை குளத்துள 1ம
வாலின் நெடிய குரங்கு.

- இப்பாடலில் பயின்று வந்துள்ள பொருள்கோளை எழுதுக.